.. ..

# சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

O.S.No: 110/2011 தேதி: 27.01.2026

வா.சா. 1 – பாத்திமாபீவி

<u>1 , 9, 10 வது பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

பிராதுடன் எனது மாமனார் அப்துல்ரசாக் இப்ராஹிம் அலிக்கு எழுதிக்கொடுத்த தான பத்திரத்தை நகல் எடுத்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதை நான் படித்து பார்த்தேன். அதில் எனது மாமனார் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் இல்லை. எனது மாமனார் கையெழுத்து செய்த வேறு ஆவணம்எ னது கைவசம் உள்ளதா என்றால் ஜமாத்தில் உள்ள திருமண ரெக்கார்டு உள்ளது. திருமண ரெக்கார்டில் உள்ள கையெழுத்து எனது மாமனாருடையது கிடையாது என்றால் சரியல்ல. எனது மாமனார் உயிருடன் இருந்த வரை தாவா சொத்துக்கள் அனைத்தும் அவருக்கு பாத்தியமானது என்றால் சரிதான். அவரது தனிப்பட்ட சொத்தை யாருக்கு வேண்டுமானாலும் இனாமாக கொடுக்கலாம் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனது மாமனார் கிரையம் வாங்கிய அசல் பத்திரம் என் வசம் இல்லை. நகல் தான் உள்ளது. எனது மாமனார் கிரையம் வாங்கிய அசல் பத்திரம் அனைத்தும் இப்ராஹிம் அலியிடம் உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனது மாமனார் தாவா சொத்தை இப்ராஹிம் அலிக்கு தான பத்திரம் எழுதிக்கொடுத்து தாய் பத்திரத்தையும் ஒப்படைத்து விட்டார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

எனது மாமனாரிடம் ஏன் இப்ராஹிம் அலிக்கு தான பத்திரம் எழுதிக்கொடுத்தீர்கள் என்று கேட்டேனா என்றால் தான பத்திரம் எழுதிக்கொடுத்ததே தெரியாது. இப்ராஹிம் அலி தான பத்திரத்தின் அடிப்படையில் மின் இணைப்பு, வீட்டு வரி அவரது பெயரில் மாற்றிவிட்டார்

என்று சொன்னால் வழக்கு நிலுவையில் இருந்த போது எனது மாமனார் பெயரில் தான் இருந்தது. எனது மாமனார் எழுதிக்கொடுத்த தான பத்திரத்தை ரத்து செய்வதற்கு நான் பரிகாரம் எதுவும் கோரவில்லை என்று சொன்னால் நான் பரிகாரம் கேட்டுள்ளேன். தாவா சொத்தை 3ம் நபரான சிக்கந்தர்பாட்ஷா கிரையம் வாங்கி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. இப்ராஹிம் அலி தான் அங்கு வசித்து வருகிறார். நாங்களும் வசித்து வருகிறோம். தாவா சொத்தில் மின் இணைப்பை பிடுங்கி போட்டதால் நான் எனது மகள் வீட்டில் குடியிருந்து வருகிறேன். எனது மகள் வீடு அஜீஸ் நகர் 10 வது தெருவில் வாடகைக்கு குடியிருந்து வருகிறோம். நான் எப்போதுமே எனது மகள் வீட்டில் தான் குடியிருந்தேன் என்றும், தாவா வீட்டில் குடியிருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அப்துல்ரசாக்கை அவரது மனைவி தான் பராமரித்து வந்தார். அவர் இறந்த பின்னர் அவரது மனைவியை இப்ராஹிம் அலி தான் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல.

தாவா சொத்திற்கு நான் வீட்டு வரி போட்டதில்லை என்று சொன்னால் எனக்கு வசதி கிடையாது. சாப்பாட்டிற்கே எனது மாமனார் வீட்டில் தான் கொடுத்தார்கள். நான் தாக்கல் செய்த ஆவணங்கள் தாவா சொத்திற்கு உரியது கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 7 நகல் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 7 ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. அசல் ஆவணம் என் வசம் தான் உள்ளது. அப்துல்ரசாக் தாவா சொத்தை கிரையம் வாங்கிய நகலை வா.சா.ஆ 8 ஆக தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணத்தின் அசல் பிரதிவாதியிடம் உள்ளது என்றால் தெரியாது. இப்ராஹிம் அலிக்கு, அப்துல்ரசாக் எழுதிக்கொடுத்த தான பத்திரமான வா.சா.ஆ 14 ல் சாட்சி கையெழுத்து செய்த நபர்கள் இறந்துவிட்டார்கள். நம்பர் 81, நல்லூர் முஸ்லீம் தெரு, தாவா வீடு ஆகும். எனது கணவர் அப்துல்லாவுடன் பிறந்த பரிதாபீவி என்ற பெண் மகள் உண்டு. அவருக்கு பௌசி என்ற மகள் உண்டு. பரிதாபீவியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் அவரது

கணவரையும், மகளையும் தரப்பினராக சேர்த்துள்ளோம். தாவா சொத்து அப்துல்ரசாக்கிற்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்து என்றும், அதை அவர் அவரது மகனான 1ம் பிரதிவாதிக்கு தானமாக கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. மேற்படி தானத்தை ஏற்றுக்கொண்டு 1ம் பிரதிவாதி தான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 8ம் பிரதிவாதி சிக்கந்தர்பாட்ஷா வாடகை கட்டுபாட்டு அதிகாரிடம் என் மீது வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். சிக்கந்தர்பாட்ஷா கிரையம் வாங்கிய வீட்டில் நான் வாடகைக்கு இருப்பதாக சொல்லி வழக்கு போட்டார் என்றால் சரிதான். நான் தற்போது அந்த வீட்டில் குடியிருக்கவில்லை என்றால் நான் அந்த வீட்டிற்கு சென்று சுத்தம் செய்து விட்டு போக,வர இருந்து வருகிறேன். நான் அந்தை வீட்டை காலி செய்து சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றும், அதில் எனக்கு எந்த பாகமும் கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

( பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது. )

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.